சுருக்கம்

நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை – சென்னை – எண்ணூர் துறைமுக இணைப்பு திட்டத்தின் கீழ் (EMRIP) திருவொற்றியூர் – பொன்னேரி – பஞ்செட்டி சாலையினை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் – நிலம் கையகப்படுத்துதல் – நிலமதிப்பீட்டுத் தொகை கூடுதலாக ரூ.1,21,73,000/– வழங்க ஒப்புதல் அளித்து ஆணையிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்.வி.2) துறை

அரசாணை (நிலை) எண்.4

நாள்:12–01–2012

மார்கழி–27, திருவள்ளுவர் ஆண்டு 2042,

படிக்க:–

1. அரசாணை (நிலை) எண்.29, நெடுஞ்சாலைத் துறை, நாள் 31–01–2007.
2. அரசாணை (நிலை) எண்.231, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்.வி.2) துறை, நாள் 25–09–2008.
3. மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர், கடித எண்.ஆர்.சி 39072/2007/F3, நாள் 11–08–2010 மற்றும் 16–08–2011.

*******

ஆணை :–

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் சென்னை – எண்ணூர் துறைமுக இணைப்புத் திட்டத்தின் கீழ் (EMRIP) திருவொற்றியூர் – பொன்னேரி – பஞ்செட்டி சாலையினை (Tiruvottiyur-Ponneri-Panchetty Road) அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிக்கு நிலம் கையகப்படுத்த ஆகும் செலவு, விளம்பரச் செலவு மற்ற அலுவலர்கள் சம்பளம் ஆகிய செலவினங்களுக்காக ரூ.8,91,93,308/– நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதில் நிலம் கையகப்படுத்துவதற்காக மட்டும் ரூ.8,37,69,280/– அனுமதிக்கப்பட்டது.

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் திருவொற்றியூர்–பொன்னேரி–பஞ்செட்டி சாலையை நான்கு வழிப்பாதையாக அகலப்படுத்தி மேம்படுத்தும் பணிக்கு நிலம் கையகப்படுத்துவதற்கு ஏற்கனவே அனுமதித்த ரூ.8,37,69,280/– ஐ தவிர மேலும் கூடுதலாக ரூ.7,21,26,370/– ஒப்புதல் அளிக்கப்பட்டது.

3. மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மாவட்டம் அவர்கள் மேலே பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், திருவொற்றியூர்–பொன்னேரி–பஞ்செட்டி சாலையை நான்கு வழிப்பாதையாக அகலப்படுத்தும் பணிகளில் கட்டிடங்கள் மதிப்பீட்டிற்கு முதன்மை செயலாளர்

மற்றும் நில நிர்வாக ஆணையரின் ஒப்புதல் நிலுவையில் இருந்ததாலும் மற்றும் ஒரு சில இனங்களில் பதிவேடுகள் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டதாலும்,நில உரிமையை முடிவு செய்ய இயலாத நிலை இருந்தது எனவும், அந்த இனங்களுக்கு தீர்வாணை பிறப்பிக்கப்பட உள்ளதால் இப்பணிக்கு கூடுதலாக ரூ.1,21,73,000/– நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அரசினைக் கோரியுள்ளார்.

4. திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் செயற்குறிப்பை ஆய்வு செய்த அரசு அதனை ஏற்று, திருவொற்றியூர்–பொன்னேரி–பஞ்செட்டி சாலையை நான்கு வழிப்பாதையாக அகலப்படுத்தி மேம்படுத்தும் பணிக்கு நிலம் கையகப்படுத்துவதற்கு ஏற்கனவே அனுமதித்த ரூ.15,58,95,650/– ஐ தவிர மேலும் கூடுதலாக ரூ.1,21,73,000/– ற்கு (ரூபாய் ஒரு கோடியே இருபத்தியோரு இலட்சத்து எழுபத்து மூவாயிரம் மட்டும்) ஒப்புதல் வழங்கி ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

5054–சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு – 04 – மாவட்டச் சாலைகளும் ஏனைய சாலைகளும் – 800 – ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநிலத் திட்டம் – JK – புறவழிச்சாலை அமைப்புக்காக நிலம் கையகப்படுத்துதல் – 64 – நிலங்கள். (த.தொ.கு.5054–04–800–JK–6403)

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் வரும் 2011–12 திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்திய மதிப்பீட்டில் வழங்கப்படும். அவ்வாறு வழங்குவதை எதிர்நோக்கி, இச்செலவினத்தை மேற்கொள்ள தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), நெடுஞ்சாலைத்துறை, சென்னை அவர்களுக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகின்றது. மேலும், 2011–12 திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்திய மதிப்பீடு கருத்துருவை நிதித்துறைக்கு அனுப்பிடும் பொழுது மேற்காணும் செலவினத்தையும் தவறாமல் சேர்த்து அனுப்புமாறு தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), நெடுஞ்சாலைத்துறை, சென்னை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், இச்செலவினம் 2011–12 ஆம் ஆண்டு துணை மதிப்பீட்டில் சேர்க்கப்படவேண்டும். இதற்குரிய வரைவு குறிப்பினை உரிய நேரத்தில் நிதித்துறைக்கு அனுப்புமாறும் தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), நெடுஞ்சாலைத்துறை அவர்கள் கோரப்படுகிறார்.

7. மேலும் இத்தொகையைப் பெற்று, பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் சிறப்பு வட்டாட்சியர் (நிலஎடுப்பு) திருவொற்றியூர்–பொன்னேரி–பஞ்செட்டி சாலை திட்டம், பொன்னேரி அவர்கள் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும் என்று தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) அவர்களுக்கு அறிவுரை வழங்கப்படுகிறது.

K வைப்பீடுகள் மற்றும் முன்பணங்கள் (b) வட்டி ஈட்டாத வைப்பீடுகள் – 8443–00–சிவில் வைப்பீடுகள் – 117 தனியார் அமைப்புகள் அல்லது தனி நபர்கள் செய்த பணிக்கான வைப்பீடுகள் – AA – தனியார் அமைப்புகள் அல்லது தனிநபர்கள் செய்த பணிக்கான வைப்பீடுகள் (த.தொ.கு.8443–00–117–AA–000l) வரவுகள்.

8. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா. எண்.68304/பொ.ப–I/2011, நாள் 11–01–2012 ன் படி வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1335 (ஆயிரத்து முன்னூற்று முப்பத்தைந்து)

(ஆளுநரின் ஆணைப்படி)

தா.கி. ராமசந்திரன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு),
நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5.
மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர்.
மாவட்ட வருவாய் அலுவலர், திருவள்ளூர்.
சிறப்பு வட்டாட்சியர் (நில எடுப்பு), திருவொற்றியூர்–பொன்னேரி–பஞ்செட்டி சாலை திட்டம், பொன்னேரி.

நகல்
சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை–5.
திட்ட இயக்குநர், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், சென்னை–16.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8.
நிதித் (பொ.ப.I/வரவு செலவு/பொ.ப–II) துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
செயலாளரின் நேர்முக உதவியாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, சென்னை–9.
இ.கோ/உ.கோ.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.